# மலையமான் திருமுடிக்காரி

# Malaiyaman Thirumudikari

**முனைவர் கதி. முருகேசன் (கதிர்முருகு)**
உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்
கணேசர் கலை அறிவியல் கல்லூரி
மேலைச்சிவபுரி

**Dr. KT. Murugesan (Kathirmurugu)**
*Assistant Professor, Department of Tamil*
*Ganesar College of Arts and Science*
*Melaisivapuri*

**ஆய்வுச் சுருக்கம்**

*மூன்றாம் சங்க காலத்தில் வாழ்ந்த வள்ளல்களில் ஒருவன் மலையமான் திருமுடிக்காரி. சோழ நாட்டுக்கும் சேர நாட்டுக்கும் இடையில் விளங்கிய மலையமா நாட்டில் அரசாட்சி செய்தவன். அந்நாடு மலாடு என்னும் பெயராலும் அழைக்கப்பட்டது.மலையமான் கொடையில் சிறந்த வள்ளலாகவும் சேரர் சோழர் ஆகியோரின் வெற்றியைப் போரில் முடிவு செய்பவனாகவும் இருந்தான். பெரிய மன்னர்களுடன் இணைந்து அவர்களோடு போர் புரிவது அவர்களின் பரிசுப் பொருளை ஏற்றுத் தன் நாட்டு மக்களையும் நாடிவரும் இரவலர்களையும் காப்பது அவனது தலையாய நோக்கமாக இருந்தது. மலையமான் திருமுடிக்காரிதன் பகைவர்களானசேரர்களுக்குப் படைத்துணை வழங்குகிறான் என்பதை அறிந்த அதியமான் மலையமானுடன் போர் செய்து வெற்றி பெற்றான். போரில் தோல்வி அடைந்த மலையமான் திருமுடிக்காரி அவனைத் தன் திறனால் வெற்றி கொள்ள நினைத்தான். அதன் காரணமாக அதியமானின் பகைவனான பெருஞ்சேரல் இரும்பொறையோடு நட்புக் கொண்டான்.ஆனால் பெருஞ்சேரல் இரும்பொறை வல்வில் ஓரி மீது பகை கொண்டிருந்தான். இதனை அறிந்த மலையமான் திருமுடிக்காரி தன்னுடைய எண்ணம் நிறைவேற வேண்டுமானால் பெருஞ்சேரல் இரும்பொறையின் பகை முடிக்க வேண்டும் என எண்ணினான். சேரன் துணையோடு படையெடுத்து ஓரியை வென்று கொல்லிமலையைச் சேர நாட்டுடன்*

***Abstract***

*Malayaman Thirumudikari was one of the Vallals who lived during the Third Sangam period. He was the ruler of Malayamanadu, which was situated between the Chola and Chera countries. That country was also called Maladu. Malayaman was the best warrior in Kodai and the decisive factor in the victory of Cherar and Cholas in battle. His main aim was to fight alongside the great kings and accept their gifts and protect his countrymen and aspirants. Knowing that Malayaman Thirumudikari was giving military aid to his enemies the Cheras, Athiyaman fought with Malayaman and won. Malayaman Thirumudikari, who was defeated in the battle, thought to win him by his own skill. Because of that he befriended Adhyaman's enemy Peruncheral Irumporai. But Peruncheral had a grudge against Irumporai Valvil Ori. Knowing this, Malayaman Thirumudikari thought that if his wish was to be fulfilled, Peruncheral should end the enmity of Irumporai. Cheran invaded and conquered Ori and*

*இணைத்தான். அதற்குக் கைமாறாகப் பெருஞ்சேரல் இரும்பொறை அதியமான் மீது படை எடுத்து அவனை அழித்தான். சாதாரண மக்களையும் வள்ளல்களையும் காப்பதைக் குறுநில மன்னர்களும் பேரரசர்களும் அறமாகக் கருதினார்கள் ஆனால் அரசாட்சியைப்பொறுத்தவரைபகையும்பகைமுடிக்கும் திறனும்அவற்றுக்கானமுயற்சியும்உடையவர்களாக விளங்கினார்கள்.*

***முக்கியச்சொற்கள்:*** *மலையமாநாடு, மலாடு, வல்வில்ஓரி, அதியமான், பெருஞ்சேரல் இரும்பொறை, கொல்லிமலை, தகடூர்*

*annexed Kollimalai to Chera country. In return, Peruncheral Irumporai attacked Athiyaman and destroyed him The feudal lords and emperors considered it a virtue to protect the common people and their subjects, but when it came to kingship, they were known to have the ability and effort to end hostilities.*

***Keywords****: Malayamanadu, Maladu, Valvil Ori, Adhiyaman, Peruncheral Irumporai, Kollimalai, Thakadur*

**Citation**

Murugesan, KT. "Malaiyaman Thirumudikari." *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 2, 2023, pp. 29–36.

**DOI**: *https://doi.org/10.5281/zenodo.20096676*

**முன்னுரை**

*தமிழக வரலாற்றை அறிந்து கொள்வதற்குக் கல்வெட்டுகள் செப்பேடுகள் முதலான சான்றுகளோடு இலக்கியங்களும் சான்றுகளாகக் கொள்ளத்தக்கன. அவ்வகையில் சங்க இலக்கியங்கள் தமிழக வரலாற்றை அறிந்துகொள்ளப் பெருந்துணை புரிகின்றன. சங்க அக இலக்கியங்களிலும் புற இலக்கியங்களிலும் காணப்படும் முடி மன்னர்கள், அரசர்கள், குறுநில மன்னர்கள், படைத்தலைவர்கள், கடையெழு வள்ளல்கள் முதலானோர் குறித்த செய்திகள் மன்னர்கள் பழங்காலத்தில் எவ்வாறு ஒருவரோடு ஒருவர் உறவாகவும் பகையாகவும் இருந்து பகை முடித்தனர் என்பதையும் இரவலர்களையும் கலைஞர்களையும் எவ்வாறு போற்றினார்கள் என்பதையும் அறிந்து கொள்ளத் துணையாக விளங்குகின்றன. கடையெழு வள்ளல்களில் மலையமான் திருமுடிக்காரி மலையமா நாடு முள்ளூர் மலை ஆகியவற்றுக்கு உரிமை பூண்டு ஆட்சி செய்தவன். மலையமான் திருமுடிக்காரியின் நாடு மலையமா நாடு என்றும் மலாடு என்றும் அழைக்கப்பட்டது. கொடைப் பண்பில் சிறந்து விளங்கினான். பகைவர்களைஅழிப்பதற்குச்சரியானகாலத்தைஎதிர்நோக்கியிருப்பவனாகவும் பகைமுடிக்கப் பிறரோடு உறவு கொள்ளத் தயங்காதவனாகவும் இருந்தான் என்பதை அவனுடைய வரலாறு மெய்ப்பிக்கிறது. இக்கட்டுரை மலையமான் திருமுடிகாரியின் கொடை பண்பு சூழ்ச்சி ஆளுமைப் பண்பு வெற்றி முதலியவற்றை ஆராய்கிறது.*

***மலையமாநாட்டின் அமைப்பு***

*சங்க காலத்தில் தமிழகத்தை ஆட்சி செய்த குறுநில மன்னர்களுள் வலிமையும் சிறப்பும் பொருந்தியவர்கள் மலையர் என்று அழைக்கப்பட்ட மலையமான்கள். இவர்கள் பழைய தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள தென்பெண்ணை ஆற்றங்கரையில் புகழ்பெற்று விளங்கிய திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தவர்களாவர் இந்நாடு பண்டைக் காலத்தில் மலையமாநாடு மலாடு என்னும் பெயர்களைக் கொண்டதாக விளங்கியது. காடும் மலைகளும் சூழ்ந்த இப்பகுதி இயற்கைச்சீற்றங்களில் பாதிக்கப்படாத பகுதியாக விளங்கியது.* ***“கடல் கொளப் படா அது உடலுநர் ஊக்கார் / கழல் புனை திருந்தடிக்காரி நின்னாட்டே” (புறம். 122)*** *இந் நாட்டில் முள்ளூர் என்னும் பெயர் கொண்ட வளம் மிக்க மலை விளங்கியது. மலையமா நாட்டின் கிழக்கில் சோழ நாடும் மேற்கில் சேர நாடும் இருந்தன இடைப்பட்ட பகுதியில் மலையமாநாடு விளங்கியது.*

***முள்ளூர் மலையின் சிறப்பு***

*மலையமான்திருமுடிகாரியின்எல்லைக்குஉட்பட்டுவிளங்கியமுள்ளூர்மலைமிகுதியான வளம் நிறைந்ததாக விளங்கியது. அந்தணர்கள் மனம் விரும்பி வாழும் இடமாக இருந்தது ''அழல் புறந் தருஉம் அந்தணரதுவே'' (மேலது.) மலை முழுவதும் சந்தன மரங்கள் நிறைந்து காணப்பட்டன'' எஃகு விளங்கு தடக்கை மலையன் கானத்து ஆரம் நாறும்'' (குறுந்.168) முள்ளூர் மலையின் வளத்தை அகநானூறு, குறுந்தொகை, புறநானூறு ஆகிய இலக்கியங்கள் விரிவாகப் பேசியுள்ளன.*

***போர்த்தொழிலும் மலையர் இனமும்***

*மலையர்கள் சிறந்த வீரம் உடையவர்களாக விளங்கினர். மேற்கில் இருந்த சேர நாட்டு மன்னர்களுக்கும்கிழக்கில்இருந்தசோழநாட்டுமன்னர்களுக்கும்பகைஏற்பட்டுப்போராகமாறும்*

*சூழலில் இரு நாடுகளுக்கும் இடையில் இருந்த மலையமாநாடு யாருக்குப் படைத்துணையாகச் செயல்படுகிறதோ அவர்கள் அப்போரில் வெற்றி பெற்றார்கள். போரில் வெற்றி பெற்றவர்களும் தோல்வி அடைந்தவர்களும் மலையர்களைத் துணையாக கொண்ட வெற்றியின் சிறப்பையும் அவர்களைத் துணையாக கொள்ளாத காரணத்தால் தோல்வியடைந்ததையும் குறிப்பிட்டிருக்கின்றனர், இதனை,*

***கடந்தட்டு வென்றோனும் நிற்கூ றும்மே***
***வெலீஇயோன் இவன்எனக்***
***கழலணிப் பொலிந்த சேவடி நிலங்கவர்பு***
***விரைந்துவந்து சமந்தாங்கிய***
***வல்வேல் மலையன் அல்லன் ஆயின்***
***நல்லமர் கடத்தல் எளிதுமன், நமக்குஎனத்***
***தோற்றோன் தானும் நிற்கூ றும்மே***
***தொலைஇயோன் இவன்என***
***ஒருநீ ஆயினை பெரும பெருமழைக்கு***
***இருக்கை சான்ற உயர்மலைத்***
***திருத்தகு சேய்நிற் பெற்றிசி னோர்க்கே (புறம்.125:13 - 20)***

*என்னும் புறநானூற்றுப் பாடல் வழி அறிய முடிகிறது.*

### *மலையமான் திருமுடிக்காரி*

*மலையமான் இனத்தில் வந்த குறுநில மன்னர்களுள் ஆளுமைப் பண்பும் பகை வெல்லும் திறனும் மிக்கவன் மலையமான் திருமுடிக்காரி. அவனுடைய குதிரையும் காரி என்னும் பெயர் கொண்டு விளங்கியது. பசுக்களைக் கவர்ந்து வரும் வெட்சிப் போரில் புகழ்பெற்று விளங்கினான். ''முனையூர்ப் பல்லா நெடுநிரை வில்லின் ஒய்யும் தேர்வண் மலையன்'' (நற். 100) முள்ளூர் மலையைக் கைப்பற்ற வேண்டும் என்னும் எண்ணம் கொண்டு வந்த ஆரிய அரசனை வென்று அம்மலையைத் தனதாகவே கொண்டு அரசாட்சி செய்த பெருமைக்கு உரியவனாக விளங்கினான். ''ஆரியர்துவன்றிய பேரிசை முள்ளூர்ப் பலருடன் கழித்த ஒள்வாள் மலையனது/ ஒரு வேற்கு ஓடியாங்கு'' (நற். 170).*

### *கொடைச்சிறப்பு*

*காரி கடையெழு வள்ளல்களில் ஒருவன். தன்னை நாடி வந்த புலவர்களுக்கும் இரவலர்களுக்கும் கலைஞர்களுக்கும் தகுதி பாராமல் வழங்கும் இயல்புடையவன். பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்றான சிறுபாணாற்றுப்படை, ''ஈர நன்மொழி யிரவலர்க் கீத்த... கழறொடித் தடக்கை காரியு'' (சிறுபாண்.93 - 95)என்னும் அடிகளால் காரி தன்னை நாடி வரும் இரவலர்களை அருள் நிரம்பிய சொற்களால் உபசரிப்பவன் என்று அறியமுடிகிறது. மன்னர்கள் தங்களை நாடி வந்த இரவலர்களுக்கு அவர்களின் தகுதியைப் பாராமல் தேர்களையும் விலை உயர்ந்த அணிகலங்களையும் வழங்குவது இயல்பு. அவ்வாறு அவர்கள் வழங்கும்போது கள் அருந்தி மயக்கத்தில் இருக்கின்ற காரணத்தால் என்ன கொடுக்க வேண்டும் என்று அறியாமலேயே கொடுக்கும் இயல்புடையவர்களாக இருந்தனர். ஆனால் காரி கள் அருந்தும் வழக்கம் இல்லாதவன். கொடுக்கின்ற பொருள் இன்னது என்று அறிந்து கொடுக்கும் இயல்புடையவன். தேர்களையும் குதிரைகளையும் யானைகளையும் கணக்கிட முடியாத வகையில் இரவலர்களுக்கு கொடுத்தவன். இதனை அறிந்து கொள்ள,*

*நாட்கள் உண்டு, நாள்மகிழ் மகிழின்*
*யார்க்கும் எளிதேதேர் ஈதல்லே*
*தொலையா நல் இசை விளங்கு மலையன்*
*மகிழாது ஈத்த இழை அணி நெடுந் தேர்*
*பயன் கெழு முள்ளூர் மீமிசைப்*
*பட்ட மாரி உறையினும் பலவே''* (புறம்.123)

என்னும் பாடல் சான்றாக அமைகிறது. காரியின் கொடைப் பண்பைப் பல்லாற்றனும் கேட்டறிந்த கபிலர் மலையமானைச் சந்தித்து அவன் புகழ் பாடிப் பரிசில் பெற நின்றபோது மற்ற புலவர்களையும் கபிலரையும் ஒன்றாகவே மதித்து அவன் பரிசில் வழங்கினான். அவன் கொடுத்த பரிசு தன்னுடைய தகுதிக்குப் பொருந்தாது என்று நினைத்த கபிலர்,பரிசு பெற வரும் அனைவரும் தகுதி உடையவர்கள் அல்ல. சிறந்தவர் இவர் நடுத்தரமானவர் இவர் சிறந்தார் அல்ல இவர் என்று அறிந்து மன்னன் பரிசு வழங்க வேண்டும். யாருக்கு என்ன கொடுக்க வேண்டும் என்னும் குணம் மன்னனுக்கு வேண்டும். தகுதியறிந்து பரிசு கொடுக்க வேண்டும். இனியேனும் அதனை நீ மேற்கொள்ள வேண்டும் என்று மலையமான் திருமுடிக்காரிக்குக்கு கபிலர் அறிவுரை கூறினார். இதனை விளக்குவதாக,

*ஒருதிசை ஒருவனை உள்ளி நாற்றிசைப்*
*பலரும் வருவர் பரிசில் மாக்கள்*
*வரிசை அறிதலோ அரிதே; பெரிதும்*
*ஈதல் எளிதே மாவண் தோன்றல்*
*அதுநற்கு அறிந்தனை ஆயின்*
*பொதுநோக்கு ஒழிமதி புலவர் மாட்டே* (புறம்.121)

என்னும் பாடல் அமைந்திருக்கிறது.

### அதியமான் போர் வெற்றியும் மலையனின் சினமும்

அதியமான் நெடுமான் அஞ்சி சேரர் வழி வந்தவன். அவன் மலையமான் திருமுடி காரி மலையமா நாட்டை ஆட்சி செய்த காலத்தில் சேர நாட்டின் ஒரு பகுதியைப் போர் செய்து கைப்பற்றி அரசாட்சி செய்து வந்தான். மலையமான் திருமுடிக்காரி சேரர்களுக்குப் படைத் துணையாகச் செயல்படும் காரணத்தால் மலையமானுடன் பகை கொண்டு அவனை அழிக்க எண்ணினான். படை நடத்தித் சென்று திருக்கோவலூருக்கு அழிவை உண்டாக்கிப் பெரும் வெற்றி பெற்றான். அவனுடைய வெற்றியை பரணர் புறநானூற்றில் புகழ்ந்து பாடியுள்ளார். ''பரணன் பாடினன் மற்கொல் மற்று நீ/முரண்மிகு கோவலூர் நூறி நின்/அரணடு திகிரி யேந்திய தோளே'' (புறம். 99: 12-14) அதியனின் வெற்றியும் தன் தலைநகரின் அழிவும் கண்ட மலையமான் அவன் மீது சினம் கொண்டான்.அவனை அழிக்க எண்ணம் கொண்டான்.

### மலையனின் பகை முடிக்கும் திறன்

நாடாளும் மன்னர்களுக்குச் சிறந்த ஆண்மையும் பகை வெல்லும் திறனும் தேவை. மலையமா நாட்டுக்குப் பெரிய அழிவை ஏற்படுத்தி வெற்றி பெற்ற அதியமானை வெற்றி கொள்வதற்கு மலையமான் பல திட்டங்களை வகுத்தான், சேர நாட்டில் அரசாட்சி செய்து கொண்டிருந்த பெருஞ்சேரல் இரும்பொறை அதியமானிடம் பகை கொண்டிருக்கிறான் என்பதை அறிந்து அவன் துணையோடு அதியமானை வெற்றி கொள்ளலாம் என்று நினைத்தான். ஆனால்

*பெருஞ்சேரல் இரும்பொறை சேர நாட்டின் ஒரு பகுதியைக் கைப்பற்றி ஆண்டு கொண்டிருந்த வல்வில் ஓரியைப் பகை கொண்டு அழிக்க நினைத்தான். இதனை அறிந்த மலையன் தன் எண்ணம் நிறைவேற வேண்டுமானால் பெருஞ்சேல் இரும்பொறைக்குத் துணையாக நின்று ஓரியை அழிக்க வேண்டும் என நினைத்தான். அவன் எண்ணப்படியே சேரன் துணையுடன் படை நடத்தி வெற்றிகொண்டான். அவ்வெற்றியைப் படைகளுடன் கொண்டாடி ஆரவாரம் செய்தான். மலையனின் வெற்றி அகநானூறு,நற்றிணை ஆகிய இலக்கியச் சான்றுகளால் அறியப்படுகிறது. ''முள்ளூர் மன்னன் கழல் தொடிக் காரி/ செல்லா நல்லிசைநிறுத்த வல்வில் / ஓரிக் கொன்று சேரலர்க்கு ஈத்த/செவ்வேர்ப் பலவின் பயங்கெழுகொல்லி'' (அகம். 209: 12 - 15) ''ஓரிக் கொன்ற ஒரு பெருந் தெருவில் / காரி புக்க நேரார் புலம் போல் / கல்லென் றன்றால் ஊரே'' (நற்.320)ஓரி அரசாண்ட பகுதியைச்சேர நாட்டுடன் இணைத்த மலையமான் திருமுடிக் காரியின் செயலால் மகிழ்ச்சி கொண்ட பெருஞ்சேரல் இரும்பொறை மலையமான் மகிழ்ச்சி கொள்ளுமாறுபடை நடத்திச் சென்று அதியமானை வெற்றி கொண்டான்.*

***மலையமானின் முடிவு***

*பெருஞ்சேரல் இரும்பொறையும் மலையமான் திருமுடிக்காரியும் செல்வாக்கோடு அரசாண்ட காலத்தில் சோழ நாட்டில் கிள்ளி வளவன் அரசாட்சி செய்து வந்தான். தன்னுடைய பகைவனான பெருஞ்சேரல் இரும்பொறைக்குப் படைத்துணை வழங்குகின்ற காரணத்தாலும், சோழ நாட்டில் நடைபெறும் அரசியல் போராட்டத்தில் மலையன் துணை நிற்கக்கூடும் என்னும் காரணத்தாலும் அவன் மீது சினம் கொண்டு படை நடத்திச் சென்றுஅவனைக் கொன்று வெற்றிபெற்று அவனது குழந்தைகளையும் சிறைப்படுத்தி யானையின் காலின் கீழ் இட்டுக் கொலை செய்ய எண்ணம் கொண்டான். இதனால் தனக்கு எதிரானவர்கள் யாரும் குலத்தில் எஞ்சி இருக்கக் கூடாது என்னும் எண்ணப் போக்கு மன்னர்களிடம் நிலவியதை அறிய முடிகிறது. கிள்ளி வளவனின் இச்செயல் கண்டு அதிர்ச்சியுற்ற வளவனின் அவைக்களப் புலவர் கோவூர்க் கிழார் தக்க காலத்தில் அவனுக்கு அறிவுரை கூறியதுடன் குழந்தைகளையும் காத்தார். அந் நிகழ்வு.*

***நீயே புறவின்அல்லல் அன்றியும் பிறவும்***
***இடுக்கண் பலவும் விடுத்தோன் மருகனை***
***இவரே புலன்உழுது உண்மார் புன்கண்அஞ்சித்***
***தமதுபகுத்து உண்ணும் தண்ணிழல் வாழ்நர்***
***களிறுகண்டு அழூஉம் அழாஅல் மறந்த***
***புன்தலைச் சிறாஅர் மன்றமருண்டு நோக்கி***
***விருந்திற் புன்கண் நோவுடையர்***
***கேட்டனை யாயின்நீ வேட்டது செய்ம்மே (புறம்.46)***

*என்னும்பாடலால்எடுத்துக்காட்டப்படுகிறது. கிள்ளிவளவனின்செயல்கண்டகோவூர்க்கிழார், புறாவுக்கு ஏற்பட்ட சிறு துன்பத்திற்கும் இரங்கும் குணம் உடையவர்கள் உன் முன்னோர்கள். ஆனால் இங்கு உன் முன் நிறுத்தப்பட்டிருக்கும் மலையனின் குழந்தைகள் வறுமையால் வாடியவர்களுக்கு எல்லாவற்றையும் அளித்து மகிழும் உயரிய குடிவழி வந்தவர்களாவர். அடைக்கலமாக வந்தவர்களை ஆதரித்துப் போற்றும் மரபில் வந்த நீ சிறு குழந்தைகளை அழிக்கஎண்ணுவதுஅறவழிப்பட்டசெயலாகாது. தங்களைக்கொல்லவரும்யானைஇதுஎன்று அறியாமல் அதனைப் பார்த்துத் தம் அழுகையை மறந்து சிரித்துக்கொண்டிருக்கின்றனர்.*

இத்தகைய குழந்தைகளைக் கொல்வது அறச் செயல் அல்ல என்று அறிவுரை கூறுகிறார். அவரது அறிவுரையால் கிள்ளிவளவன் மனம் மாறினான். கோவூர்க் கிழாரால் உயிர் பிழைத்த மலையனின் மக்கள் இருவரும் பின்னாளில் பாரியின் குல மகளிர் அங்கவை சங்கவை என்னும் இருவரின் மணாளர்களாவர்.

**மன்னர்களின் மனநிலை**

பண்டைய மன்னர்கள் போரில் பெரு விருப்பு உடையவர்களாக விளங்கினர். பெரு நிலப்பரப்பை வெற்றிகொண்டு அனைவரையும் தன்னடிக் கீழ்க் கொண்டு ஆள நினைத்தனர். அதனால் தம் வீரத்தை நிலைநாட்டவும் புகழைப் பெருக்கவும் போர் செய்தனர். "மூவேந்தர்கள் ஒற்றுமையுடன் உலகைஆட்சி செய்யவில்லை. அவர்கள் ஒவ்வொருவரும் பிறரை அடக்கி ஆள வேண்டும் என்னும் எண்ணம் உடையவர்களாக இருந்தனர். ஒருகுடியில் ஒரு காலத்தில் ஆற்றல் மிகுந்த அரசன் தோன்றிவிட்டால் அவன் பிற அரசுகளை எல்லாம் பணியவைத்துப் பேரரசனாய் வாழவேண்டும் என்று நினைப்பதும் அவனது ஆற்றலையும் செல்வ வளத்தையும் கண்டு மனம் பொறுக்காத பிற அரசர்கள் அனைவரும் ஒன்று கூடி அவனை அழிக்க வழிகாண்பது அக்கால வழக்கமாகும். ஒரு குடியில் பிறந்தவர்கள் பிற குடியில் பிறந்தவர்களுடன் பகை கொண்டு வாழ்வதோடு நில்லாமல் ஒரே குடியில் பிறந்தவர்களுடன் பகைத்துக்கொண்டனர். தந்தை மகன் பகை கொண்டு போருக்கு எழும் சூழலும் இருந்தது" (கா. கோவிந்தன், வள்ளல்கள், ப.40) என்று கா. கோவிந்தன் கூறுவது பண்டைத் தமிழக நிலையை அறிந்து கொள்ள உதவுகிறது. எவ்வாறேனும் வெற்றி கொள்ள வேண்டும் அதனால் புகழ் பெற வேண்டும் என்னும் எண்ணம் அவர்களுக்குள் ஆழமாக வேரூன்றி இருந்ததை இது காட்டுகிறது. "ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும் புதுவ தன்றிவ் வுலகத் தியற்கை" (புறம். 76:1-2) என்னும் இடைக்குன்றூர்க் கிழாரின் பாடல் அடிகள் உலக இயற்கை உணர்த்துவது காண்க.

**முடிவாக**

மலையர் குடியினர் குறு நில மன்னர்களாக விளங்கினர். இவர்களின்ஆட்சி திருக்கோவலூரைத் தலைமை இடமாகக் கொண்டு நடைபெற்றது. வலிமை உடைய மலையமான் மன்னர்கள் சேர, சோழ நாடுகளுக்கு இடைப்பட்ட பகுதியில் வாழ்ந்த காரணத்தால் சூழலுக்கு ஏற்ப இரு நாடுகளுக்கும் படைத் துணையாக விளங்கியதுடன் வெற்றி பெறும் நாட்டின் வெற்றியில் பெரும் பங்கு வகிப்பவர்களாக இருந்தனர். அவ்வகையில் மலையமான் திருமுடிக்காரி தன்னை நாடி வரும் இரவலர்கள் கலைஞர்கள் புலவர்கள் ஆகியோரைக் காப்பவனாகவும் அவர்களின் வாழ்க்கை சிறக்க உதவுபவனாகவும் இருந்தான். பகைமுடிக்கும் ஆற்றல் நிறைந்தவனாகவும் அதற்காகப் பிறருக்கும் படைத்துணை கொண்டு நினைத்ததை முடிக்கும் ஆற்றல் உடையவனாகவும் விளங்கினான். கிள்ளி வளவன் மலையமானைக் கொன்று அவன் மக்களைச் சிறைப் பிடிப்பதுடன் அவனது வாழ்வு முடிகிறது.

**பயன்பட்ட நூல்கள்**

1. அகநானூறு, சென்னை: கழக வெளியீடு, 1974.
2. கதிர் முருகு, பத்துப்பாட்டு மூலமும் உரையும், சென்னை: சாரதா பதிப்பகம், 2009.
3. குறுந்தொகை சென்னை: சாரதா பதிப்பகம், 2012.
4. கோவிந்தன் கா, வள்ளல்கள், சென்னை: கழகம், 1961.

5. நாராயணசாமி ஐயர் பின்னத்தூர், நற்றிணை, சென்னை: கழக வெளியீடு, 1976.
6. பத்துப்பாட்டு மூலமும் உரையும், சென்னை: என். சி.பி.எச், 2004.
7. புறநானூறு, சென்னை:கழக வெளியீடு, 1971.

**References**

1. *Agananooru, Chennai: Kazhaga veliyeedu, 1974.*
2. *Kathirmurugu, patthup paattu Moolamum uraiyum, Chennai: Saradha Padhippagam, 2009.*
3. *Kurundhogai, Chennai: Saradha padhippagam, 2012.*
4. *Govindan, ka, Vallalkal, Chennai: Kazhagam, 1961.*
5. *Narayanasamy Aiyar, Natrinai, Chennai: Kazhagam, 1976.*
6. *patthup pattu Moolamum uraiyam, Chennai: NCBH, 2004.*
7. *Pura Naanoru , Chennai: Kazhagam, 1971.*